**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.240/2023**

**தேதி : 06.03.2025**

**(வா.சா.1) – திரு. பெரியசாமி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1, 2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (1, 2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. நாங்கள் பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் நான் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். என் மனைவிதான் தரப்பினர். மேற்படி ஆவணத்தைப் பொறுத்து நான் கொடுக்கும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் கிரையம் பெறும்போது என் மனைவி சொத்தை அளந்து கிரையம் பெற்றாரா என்றால் இல்லை. 2–ம் வாதியும் சொத்தை அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2. கிணற்றை ஒட்டியுள்ள மேல்புற பாகத்தைத்தான் குப்புலட்சுமி அனுபவித்து வந்தார் என்றால் 3 ல் 2 பாகத்தில் பொதுவாக விவசாயம் செய்து வந்தார்கள். நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பும், பின்பும் கிணற்றை ஒட்டியுள்ள மேல்புற பாகத்தைத்தான் அனுபவித்து வந்ததாகச் சொன்னால் நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பு குறிப்பிட்டு யாரும் அனுபவிக்கவில்லை, பொதுவாக இருந்தது. தாவாச்சொத்துக்களில் ஊரடியை ஒட்டி கிழபுறமாக உள்ள சொத்துக்களை 1–ம் பிரதிவாதியின் மனைவி காளியம்மாள் அனுபவித்து வந்ததாகச் சொன்னால் சரியல்ல, பயன்படுத்தாமல் இருக்கும் நிலத்தில் மாட்டுத் தீவணம் விதைத்துக்கொள்ளலாம் என்று குப்புலட்சுமி சொல்லியிருந்தார்.

3. தாவாச்சொத்தில் எந்த பாகம் பயன்படுத்தாமல் இருந்தது என்றால் மேற்கு கடைசியில் சிறிது பாகம் இருந்தது. அந்த பாகத்தில் மாட்டுக்கு சோளம் விதைத்து அறுவடை செய்து வந்தோம். அதில் வாய்க்காரால் எதுவும் நடக்கவில்லை. தாவாச்சொத்துக்களை பாகம் பிரித்துககொள்வதைப் பொறுத்து 1,2 வாதிகளின் முன்பாத்தியஸ்தர் குப்புலட்சுமியும், 1ம் பிரதிவாதியின் மனைவி காளியம்மாளும் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் பாகம் பிரிக்கவில்லை. அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. தாவாச்சொத்துக்கு தென்புறம் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சர்வே எண்.112/4 ல் உள்ளது.

4. அந்த சொத்திலிருந்து தாவாச்சொத்திற்கு நிலத்தடிக்குழாய் அமைத்து தண்ணீர் பாய்ச்சி வருவதாகச் சொன்னால் சரியல்ல, சர்வே எண்.112/4க்குள்தான் தண்ணீர் பாய்ச்சி வருகிறேன். நான் அவ்வாறு தண்ணீர் பாய்ச்சி வருவதை நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் நியமித்து தாவாச்சொத்தை பார்வையிட எனக்கு ஆட்சேபணை உண்டா என்றால் இல்லை. 1,2 வாதிகள் கிரையம் பெற்ற சொத்துக்களின் சர்வே எண் என்னவென்றால் 112/2. சர்வே எண்.112/2 ல் உள்ள சொத்துககளை மட்டும்தான் 1,2 வாதிகள் கிரையம் வாங்கினார்களா என்றால் சர்வே எண்.112/2–லும், 112/3–லும் உள்ள பொதுக்கிணறிலும் பாத்தியம் உள்ளது.

5. வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் சொத்து விபரத்தில் சர்வே எண்.112/3 சொத்துக்களை 1,2 வாதிகளுக்கு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா 2–ம் லக்கச் சொத்துக்களைப் பொறுத்து சர்வே எண்.112/3 ல் உள்ள சொத்துக்களைப் பொறுத்து 1,2 வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரிதான். ஆனால் மொத்தமாக வரக்கூடிய பங்கில் கணேசன் பொதுக்கிணற்றில் 3 ல் 1 பங்கு என எழுதியுள்ளது சரியல்ல, அதிகமாக எழுதியுள்ளார்.

6. தங்கராஜ் என்னுடைய தம்பி. 2-ம் லக்கச்சொத்துக்களைப் பொறுத்து நானும் என் தம்பியும் 12ல் 3 பாகம் கேட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. 2ம் லக்கச் சொத்துக்களைப் பொறுத்து நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)**

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.03.07 17:30:22 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**